

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.005/2016
தேதி.08.01.2016

# ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி
# தமிழக மக்களுக்கு கிடைத்த பொங்கல் திருநாள் பரிசு
# பாரதப் பிரதமருக்கு நன்றி
# ச.ம.க.நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழகத்தில் நடைபெற்று வந்த வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு கடந்த சில வருடங்களாக தடைபட்டு தடைபட்டு நடைபெற்று வந்தது, கடந்த வருடம் நடைபெறாமலேயே போய்விட்டது. இந்த ஆண்டு எப்படியாவது நடைபெறும் என்ற எதிர்பார்ப்பில் தமிழக மக்கள் காத்திருந்தார்கள். மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் அவர்களும் தொடர்ந்து ஜல்லிக்கட்டு நடைபெறும் என்ற உறுதியான செய்திகளை வெளியிட்டுக்கொண்டே இருந்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் பிரதமருக்கு கடிதம் எழுதியதோடு அல்லாமல் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்திருந்தார்கள். சமத்துவ மக்கள் கட்சியும் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் பி.ராஜசேகர் அவர்களும் மற்றும் ஜல்லிக்கட்டுப் பேரவை நிர்வாகிகளும் தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொண்டே இருந்தோம். சமத்துவ மக்கள் கட்சியின் ஒரு கொள்கையாகவே ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என்பது இருந்து வருகிறது.

இந்த சூழ்நிலையில் மத்திய அரசு ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்கு அரசாணை வெளியிட்டிருப்பது தமிழக மக்களுக்குக் கிடைத்த பொங்கல் பரிசாகும். வருகிற **16.01.2016** மற்றும் **17.1.2016** ஆகிய தேதிகளில் மதுரை, சிவகங்கை பகுதிகளில் நடைபெறும் ஜல்லிக்கட்டு விழாக்களில் நானும் கலந்துகொள்ள இருக்கிறேன்.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதியளித்த மத்திய அரசுக்கும், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இதற்காக குரல் கொடுத்த மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், மத்திய இணை அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், மற்றும் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று ஒருமித்த குரல் கொடுத்த அனைத்து அரசியல்

கட்சித் தலைவர்களுக்கும் ஜல்லிக்கட்டு இயக்கங்களுக்கும், ஜல்லிக்கட்டு நடத்தும் கிராமங்களில் உள்ள தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் உரிமை காக்க அனைவரும் ஒருமித்துக் குரல்கொடுத்தால் வெற்றி நிச்சயம் என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.